JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

DVC.No.15/2020 Date: 12.04.2022 P.W.1

பெயர் : ரதி
தந்தை /கணவர் பெயர் : சந்திரசேகர்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1983 of the 12th day of April 2022.

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

எங்களது திருமணம் காதல் திருமணா அல்லது பெற்றோர்களால் நிச்சியிக்கப்பட்டதா என்றால் வீட்டில் கேட்டுவிட்டு தான் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின் நாங்கள் முதலில் எனது தந்தை கொடுத்த வீட்டில் இருந்தோம் ஒரு வருடம் கழித்து வாடகை வீட்டிற்கு சென்றுவிட்டோம். தந்தை கொடுத்த வீட்டை எனது பெயரில் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி வீட்டில் நான் தற்போது தனியாக இருப்பதால் வசித்து வருகிறேன். எனது கணவர் ரூ. 2,00,000 கடன் வாங்கி கொடுத்ததின் பேரில் தான் மேற்படி கிரையபத்திரத்தை எனது பெயரில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அது போல் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் வைத்தியிருக்கம் இருசக்கர வாகனம் எனது பெயரில் தான் உள்ளது, மேற்படி வண்டிக்கு தற்போது வரை எனது கணவர் தான் தவணை செலுத்தி வருகிறார். அந்த தவணை ஒரு வருட காலத்திற்கு முன்பு முடிந்து விட்டது. அது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பிறகு தான் முடிந்தது என்றால் சரிதான். நாங்கள் திருமணத்திற்கு பிறகு குடியிருந்த வாடகை வீட்டின் முகவரி என்றால் 4, 5 வீடுகள் மாறிவிட்டோம். முதலில் நியு காலனியில் குடியிருந்தோம், பின்னர் சைதாப்பேட்டை பெருமாள் கோவில் தெரு, எம்ஜஜி பிளாட் 55எச், பாரதிதாசன் காலனி வசித்து வந்தோம். வழக்கு தாக்கல் செய்த முன்பு தான் அங்கு வசித்து வந்தோம் என்றால் கடைசியாக 55 எச் வீட்டில் வசித்து வந்தோம். எனக்கு திருமணத்தின் போது 45 சவரன் நகையும் 2 லட்சம் ரூபாய் பணமும் கொடுத்தாக பாதுகாப்பு அலுவலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விஷயத்தை பற்றி எனது குடும்பத்தினர் சாட்சி சொல்லுவார்களா என்றால் சொல்லுவார்கள், அவர்கள் என் அம்மா, 2 சகோதரிகள். மேற்படி நகை, பணம் பற்றி நிருபிப்பது எனது கடமை என்றால் சரிதான். மேற்படி நகை, பணம் மற்றும் சொத்தை எனது உடல் நிலையின் காரணமாகவும் காதலித்து எதிர் மனுதாரர் திருமணம் செய்ததால் பெற்றோர்கள் கொடுத்தார்கள். மேற்படி பொருட்களை திருமணத்தின் போதே 2002 ல் கொடுத்தார்கள். மேற்படி நகை வாங்கியதற்கான ஆவணங்கள் ஏதாவது என்னிடம் உள்ளதா என்றால் 2015 வெள்ளம் வந்ததால் அந்த ஆவணங்கள் அனைத்தும் தொலைந்து போய்விட்டது. நான் தாக்கல் செய்த எனது மனுவில் மேற்படி விவரத்தை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை அது என்னிடம் கேட்கப்படவில்லை. எங்களது திருமணம் காதல் திருமணம் என்பதால் மேற்படி பொருட்கள் சீதனமாக கொடுக்கப்படவில்லை நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் எனது குழந்தைகளை 2, 3 முறை பார்க்க சென்றேன் என்னை பார்க்க அனுமதிக்காமல் அடித்து அனுப்பினார்கள். மேற்படி சொன்ன அடித்தார்கள் என்பதற்காக ஏதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது குழந்தைகள் இருவரும் தற்போது எதிர் மனுதாரரிடம் தான் இருக்கிறார்கள். எங்கு இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. சாட்சி தானாக முன் வந்து மாமியார் வீட்டிலிருந்து தான் என்னை வெளியே அனுப்பினார்கள். நான் கூறுவது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது

குழந்தைகளை பார்க்க சொல்லுவதாக உள்ள விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்தேனா என்றால் இல்லை. பாதுகாப்பு அலுவலர்களிடம் கொடுத்த புகாரின் எதிர் மனுதாரர் மற்றோரு பெண்ணிடம் தொடர்பில் உள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சந்தேகம் எனக்கு எப்போதிலிருந்து இருக்கிறது என்றால் 2019 லிருந்தே எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டு கொண்டியிருந்தது போனில் பேசுவதை பற்றி கேட்டாள் கத்தியை எடுத்து குத்த வருவதாகவும் மற்றும் டெலிபோன் உயரை வைத்து கழுத்தை நெறிக்க முயற்சியித்தாக இருந்தார். எனது சந்தேகத்தை பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் 4, 5 முறை கொடுத்தேன் சமாதானம் படுத்தி அனுப்பினார்கள். எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் ஆர் 3, ஆர் 10 மற்றும் ஜெ 1 காவல் நிலையத்தில் கொடுத்தேன். ஆர் 3 கே. கே நகர், ஜெ1 சைதாப்பேட்டை மற்றும் ஆர் 10 எம் ஐ ஜி பிளாட் உள்ள காவல் நிலையங்கள். மேற்படி காவல் நிலையங்களில் கொடுத்த புகார் மற்றும் சிஎஸ்ஆர் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை சமாதானம் செய்து அனுப்பிவிட்டார்கள்.

2019 பிரச்சினை வந்ததாக பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்த மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கடைசியாக பாரதிதாசன் நகர், எம் ஐ ஜி பிளாட்டிலிருந்து தான் வெளியே வந்தேன், அது கே.கே நகரில் உள்ளது. மே 16ல் மேற்படி வீட்டை காலி செய்துவிட்டு அயப்பாக்கத்தில் உள்ள மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் அதன் பின் தான் நான் புகார் கொடுத்தேன். எனது மாமியார் வீட்டில் திருமணத்திற்கு பிறகு வசித்தேன் என்றால் 2, 3 முறை தான் சென்று இருப்பேன். நான் பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்த புகாரில் நான் அயப்பாக்கத்தில் குடியிருப்பதாக தெரிவித்துள்ளேன். நான் பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்த மனுவில் சைதாப்பேட்டையில் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது எனது தந்தையின் வீடு.

(நீதிமன்ற குறிப்பு - சாட்சி வலது காலில் சிறு ஊனம் இருப்பதால் சாட்சி கூண்டில் நிற்பதற்கு சிரம்மமாக இருப்பதாகவும் தனக்கு ஆஞ்சியோ செய்து இருப்பதால் மருந்து சாப்பிடுவதற்கு அனுமதி கேட்டுக் கொண்டதன் பேரில் மருந்து உட்கொண்டதற்கு பிறகு அவரது வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி இருக்கையில் அமரவைக்கப்பட்டு அவரது வேண்டுக்கோள் அவரது வழக்கறிஞரின் வேண்டுகோளை ஏற்று சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடரப்பட்டது)

நான் பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்த புகாரில் அந்த அயப்பாக்கத்தின் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மனுவில் 3 ஆண்டுகளாக வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக உள்ள வீடு பிளாட் 55 எச். நான் எனது கணவருடன் அயப்பாக்கத்தின் வீட்டில் தங்கியிருந்தால் அந்த வீட்டின் முகவரியை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்று சொன்னால் எனக்கு அந்த வீட்டின் முகவரி தெரியாது 18 வருடங்களாக நாங்கள் வாடகை வீட்டில் தான் இருந்தோம். நான் எனது கணவர் வீட்டை காலி செய்யும் போது நான் அவருடன் செல்லவில்லை என்றால் அவர் விட்டு சென்றுவிட்டார். நான் எனது மனுவில் 15 நாட்கள் மேற்படி வீட்டில் குடியிருந்தாக தெரிவித்துள்ளேன் என்றால் அவர் என்னை விட்டு சென்றுவிட்டார் நான் மகளிர் காவல் நிலையத்தில் மனு கொடுத்தேன் அவர்கள் தான் என்னை பார்த்துக் கொண்டார்கள் அவர் அங்கு வரவில்லை பின்னர் என்னை அவர்கள் தான் என்னை அம்மா வீட்டில் விட்டார்கள். பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்த மனுவில் நான் தான் எழுதி கொடுத்து கையெழுத்து போட்டேன். மேற்படி விவரங்களை நான் அளித்த புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது புகாரில் 15 நாட்கள் தனியாக தங்கியிருந்ததாகவும் எனது கணவர் வந்து பார்க்கவில்லை என்றும் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 10.05.2020 அ ன்று மகன்களை வீட்டிற்கு அழைத்து வர கேட்டதாக எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மகன்களை அழைத்து வர மறுத்துவிட்டு என்னை எனது அம்மா வீட்டிற்கு போகச்சொன்னார். நான் புகாரில் குறிப்பிட்டுள்ள

சங்கரி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வருவாரா என்றால் அவர் எங்களது வீட்டில் வேலை செய்து கொண்டு இருந்தார் சாட்சி சொல்ல வரமாட்டார். 10.05.2020 அன்று நடந்த சம்பவத்திற்காக நான் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தேன் என்றால் 100க்கு அழைத்தேன் காவல் துறையினர் வந்து அவரை எச்சரித்து சமாதானம் செய்துவிட்டு சென்றனர். எனது மகன்களை பார்க்க வேண்டும் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், என் மகன்கள் அப்பாவுடன் இருப்பேன் என்று அழுதார்கள் அதனால் விட்டுவிட்டேன். மேற்படி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது கணவர் 2019 பிரச்சினைக்கு பின்பே காலி செய்துவிட்டு அயப்பாக்கம் சென்றுவிட்டார் என்றால் கொரோனா காலம் என்பதால் மே 19, 2020 அன்று நான் ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், அவர் என்னை அடிப்பதால் கொரோனா காலம் என்பதாலும் வீட்டிற்கு செல்ல அறிவுறுத்தினர் அதன் அடிப்படையில் அம்மா வீட்டிற்கு சென்றேன், பாதுகாப்பு அலுவலர் தான் என்னை அனுப்பி வைத்தார்கள். நான் மேற்படி புகாரை மகளிர் காவல் நிலையம் ஆவடியில் கொடுத்தேன். மேற்படி புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை, பாதுகாப்பு அலுவலருக்கு தான் அது தெரியும். நான் எந்த வீட்டில் கடைசியாக குடியிருந்தேனோ அந்த ஆள் வரையில் தான் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் நான் கடைசியாக அயப்பாக்கத்தில் தான் குடியிருந்தேன். நான் மேற்படி வீட்டில் குடியிருந்தற்கான ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் காவல் துறையினர், ஆய்வாளர் லதா ஆகியோர்கள் தான் என்னை அங்கு குடி வைத்தார்கள். நான் அயப்பாக்கம் வீட்டில் எப்போதும் வீட்டில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் அது தவறு. நான் வேண்டும் என்று தான் மாமியார் வீட்டில் சென்று பிரச்சினை செய்தேன் என்று சொன்னால் அது தவறு. நான் தாக்கல் செய்துள்ள மதசாஆ.1 ஆதார் அட்டை எனது அம்மாவின் வீட்டு முகவரியில் உள்ளது. மதசாஆ.2 குடும்ப அட்டை எனது சைதாப்பேட்டை முகவரியில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் குடும்பத்தின் சம்மதத்துடன் திருமணம் செய்துயிருந்தால் எனது பெற்றோர் சாட்சி கையெழுத்து பொட்டுயிருப்பார்கள் என்று சொன்னால் எனது பெற்றோர் முன்னிலையில் திருமணம் நடந்தது. நான் கூறியவாறு திருமணம் நடந்தது என்றால் திருமணத்தின் போதே ரசீது பெற்று இருப்போம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மதசாஆ.3 ரசீதில் 18.02.2004 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரசீது கொடுப்பதற்கு கால தாமதம் ஆனது. மதசாஆ.3 ரசீது எந்த முகவரியும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மதசாஆ. 4, 5 ஆவணங்களின் உள்ள விலாசம் என் அம்மாவுடையது என்று சொன்னால் சரிதான், அங்கு தான் குழந்தை பிறந்தது. நான் நான் தாக்கல் செய்த புகார்களில் அயப்பாக்கத்தில் குடியிருந்ததாக குறிப்பிட்டு சொல்லியிருந்தேன் ஒரு வாரம் தான் வாழந்தேன் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டில் தான் இருக்கிறேன், எனது உடல் ஊனத்தின் காரணமாக என்னால் வேலை செல்ல இயலாது. நான் எனது கணவர் 2 லட்சம் ரூபாய் கடன் பெற்று வாங்கி கொடுத்த வீட்டில் ஒரு பகுதி குடியிருந்து மற்றோரு பகுதியை வாடகை பெற்று வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, எஞ்சியோ மூலமாக தான் உதவிகள் கிடைக்கிறது. எனது பிரமாண வாக்குமூல்த்தில் மேற்படி விவரங்களை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மதாசாஆ.6 நகை ரசீதில் எனது தந்தை முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தினை எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து நான் கையெழுத்து போட்டேன். பிரமாண வாக்குமூலம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு மேற்படி மனுவில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை, இப்போது தான் அவர்கள் உதவி செய்கிறார்கள். மதசாஆ.6 ஆவணங்களில் கடையின் முத்திரை இல்லாததால் அந்த ஆவணங்கள் நானாக வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐ.டி நம்பர் 309951, 230008 என்னுடையது தான். மேற்படி ஐடி

என்னுடையது தான் என்று நிருபிக்கும் கடமை என்னுடையது என்றாலும் அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மதசாஆ. 6 ஆவணம் நான் நகை வாங்கியதற்கான ரசீது. என்னுடைய நகைகள் என்ன காரணத்திற்காக மேற்படி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னுடைய நகைகள் அவரிடம் உள்ளது அதனால் தாக்கல் செய்யப்பட்டது. நான் 2019 ல் கணவரிடம் பிரிந்து சென்றுவிட்டதால் மேற்படி நகை ரசீதுகள் பற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மதசாஆ. 7 ஆவணம் நகை வாங்கியதற்கான ரசீது அந்த விவரங்களை நான் பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்த புகாரிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நகைகள் என்னிடம் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக என்னிடம் உள்ளது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மதசாஆ. 8 ஆவணம் எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளத என்றால் எனது கணவர் அவரது அண்ணன் ரவிச்சந்திரன், மாமியார் பரிமளா ஆகியோர் அடித்ததால் ஏற்பட்ட காயங்களுக்கு எடுத்த சிகிச்சைகாக தாக்கல் செய்தேன். மேற்படி ஆவணம் பாதுகாப்பு அலுவலரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணங்களை இந்த வழக்கிற்காக நான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 2019ல் எனது கணவரிடமிருந்து ஏற்கனவே பிரிந்து விட்டு நான் தான் அவர் வீட்டிற்கு சென்று பிரச்சினை செய்து பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, 2019 பிரச்சினை ஏற்பட்டது 2020ல் தான் அவர் விட்டுச் சென்றார். அது சம்மந்தமான சாட்சிகள் என் சார்பில் உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். எனது குடும்ப பிரச்சிணையை சமாதானம் செய்ய எனது குடும்பத்திலிருந்து யாரையாவது அழைத்து சென்றேனா என்றால் என் அம்மாவிற்கு கண் ஆபிரேஷன் செய்து இருந்தது, எனது தம்பி வேலை செய்கிறார் அவர்களால் வரமுடியவில்லை நான் தனியாக தான் தனியாக போராடினேன். என்னுடன் பிறந்தவர்கள் 4 சகோதரிகள், 2 தம்பி. நான் மேலே சொன்ன குற்றசாட்டுகளை நிருபிக்கும் கடமை என்னுடையது தான் என்றால் சரிதான். நான் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பதற்காக எதிர் மனுதாரிடம் அடிக்கடி பிரச்சினை செய்து குழந்தைகளையும் திட்டுக்கிறேன் என்று சொன்னால் அது தவறு. இந்த வழக்கை தவிர்த்து வேறு ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது கணவர் விவாகரத்து வழக்கு இந்த வழக்கை நான் செய்ததற்கு பிறகு தாக்கல் செய்துள்ளார். தற்போது எனது வீட்டுக்காரர் எங்கே குடியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு ஏற்கனவே சொந்த வீடு இருப்பதால் இந்த மனுவில் கொரியுள்ளது போல் வீடு தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே வீடு வைத்திருப்பதாலும் வட்டி தொழில் செய்வதாலும் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது குழந்தைகள் தற்போது 11 ம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்பு படித்து வருகிறார்கள். சாட்சி தானாக முன்வந்து 6 ம் வகுப்பு படிக்கும் போது விட்டு வந்தேன். எனது கணவர் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறார். எனது கணவர் டிரைவிங் ஸ்கூல் நடத்தவில்லை என்றாலும் டிரைவிங் ஸ்கூலில் டிரைவராக தான் இருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் கடந்த 22 வருடங்களாக அந்த துறையில் தான் பணியில் இருக்கிறார். நான் அவருடன் வாழந்த காலகட்டத்தில் அவரது டிரைவிங் ஸகூல் ஆவணங்களை சேகரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துயிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அவர் எந்த இடத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறார் என்றால் 8 இடங்களுக்கு மாறியிருப்பார் தற்போது எங்கே இருப்பார் என்று தெரியாது. மேற்படி 8 இடங்களுக்கும் நான் சென்று உள்ளேனா என்றால் சென்று உள்ளேன். தற்போது டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறாரா என்றால் எனக்கு தெரியாது. எனது குழந்தைகளின் படிப்பு செலவு அவர் தான் பார்க்கிறார் என்றால் சரிதான். எனது குழந்தைகளை பராமரிக்க பணம் கொடுத்துள்ளாரா என்றால் என்னிடம் பணம் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகு குழந்தைகளை நான் பார்க்க சென்றேனா என்றால் இல்லை ஒரு தடவை சென்றேன் அவர்கள் பார்க்க விருப்பம் இல்லை என்று கூறினார்கள். நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார்களின் மீது மேல் நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளதா என்றால் சமாதானம் செய்து அனுப்பிவிட்டார்கள். நான் வழக்கிற்காக முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவரை பழிவாங்குவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றாலும் நான் கூறியவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. எனது கணவருக்கு வாடகைக்கு குழந்தைகளை பராமரிப்பு செய்வதற்கும் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- Fanny Rajan,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur